TENAGA NASIONAL
Better. Brighter.

| | | | |
|---|---|---|---|
| Headline | Electrocuted TNB Technician Dies | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 08 Oct 2016 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Page No | 5 |
| ArticleSize | 75 cm² | Journalist | NULL |
| PR Value | RM 545 | | |



# டி.என்.பி. பொறியியலாளர் மின்சாரம் தாக்கி மரணம்

**தெலுக் இந்தான், அக்.8–**

தெனாகா நேஷனல் பெர்ஹாட் (டி.என்.பி) பொறியியலாளர் நேற்று முன்தினம் மின்சாரம் தாக்கி படுகாயம் அடைந்தார். ஆனால் நேற்றுக் காலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். தெலுக் இந்தான் மருத்துவமனை தீவிர கண்காணிப்பு பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த அவர், நேற்று காலை 8.00 மணிக்கு மரணம் அடைந்தார். அவரின் உடல், அவரின் சொந்த ஊரான கம்பார் நகருக்கு கொண்டு செல்லப்பட்டு, கோல டிப்பாங் முஸ்லிம் மையத்துக்கொல்லையில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. மரணமடைந்த முகமட் ஸைட் சுலைமான் (வயது 34) டி.என்.பி. பணியாளராக ஏப்ரல், 2002 இல் சேர்ந்தார். அவருக்கு நோர்லிடியானாவத்தி இட்ரிஸ் அக்ரி என்ற மனைவியும் 6 வயது மற்றும் 8 வயது உடைய இரண்டு பிள்ளைகளும் உள்ளனர்.

Powered by: iSENTIA